**அரசின் நிதிக்கூற்றுக்கள் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது திறைசேரியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/ மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம், இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக்கூற்றுக்களுக்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தம்பர் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இதனுடன் சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல்

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக அறிந்து கொள்வதற்காகவன்றி, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பின்வரும் அவதானிப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவததானிப்பு | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1.6.1(அ) (i) | வெளிநாட்டுக் கடன்களை கணக்கு வைத்தல் | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| 1.6.1(அ) (iii) | வெளிநாட்டுக் கடன்களை கணக்கு வைத்தல் | -மேற்படி- |
| 1.6.1(அ) (xii) | வெளிநாட்டுக் கடன்களை கணக்கு வைத்தல் | -மேற்படி- |
| 1.6.1(ஆ) | அரச கடன் கணக்கு வைத்தல் நடைமுறை | -மேற்படி- |
| 1.6.1(இ) | வெளிநாட்டு உதவிகளை கணக்கு வைத்தல் | கிடைத்துள்ள இனைத்து வெளிநாட்டு மானீயங்கள் அரசின் நிதிக்கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். |
| 1.6.1(ட) | எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம் | சரியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியமை. |
| 1.6.1(ந) | அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் | -மேற்படி- |

## 1.6 நிதிக்கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வெளிநாட்டு கடன் கணக்கு வைத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடன் சேவைப்படுத்தல் பொது திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்டவாறு காணப்பட்ட போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வெளிநாட்டு கடன் அறிக்கையிடுவதற்காக | உரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரச நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டிய பொறுப்பொன்றானமையால் அந்த பெறுமதி அரசின் | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் CS-DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப்பட்ட 8 கணக்கு உடன்படிக்கைகளுக்குரியதாக ரூபா 311,191 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி அரச நிதிக்கூற்றுக்களில் முழுமையாக அகற்றப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ii) | அரசினால் 2021 ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பொறுப்புக்களின் கீழான கடன் உடன்படிக்கைக்குரிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா 589 மில்லியனான கடன் அரச நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021007 செயற்திட்டம் தொடர்பான தகவல்கள் அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கைகளில் இடம்பெறாத காரணத்தால், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 854-1 அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (iii) | மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட 08 கடன் உடன்படிக்கைகளில் உள்ள கடன் மீதிகளில் அம்பாந்தோட்டை துறைமுகத்தினை நிர்மாணிப்பதற்காக அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன்களில் ரூபா 161,332 மில்லியன் மீதி மீள செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. அந்தக் கடன் மீதி 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அந்த நிவாரண உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொதுத்திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. எனினும் அந்தக் கடன் மீதி 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக துறைமுகங்கள் | இது தொடர்பான பணிப்புரையை திறைசேரியின் செயலாளர் இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவருக்கு வழங்கியுள்ளார். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிலும் அந்த கடன் மீதி அகற்றப்பட்டிருந்தது. இந்த கடன் மீதிக்கான கடன் சேவைப்படுத்தல் திறைசேரி மூலம் மேற்கொள்ளப்படும். | | |
| (iv) | CS - DRMS 2000+ Report 854-1 இன் அறிக்கையில் இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய கடன் நாணய அலகு (Loan Currency) யூரோ (EUR) ஆக கருத்தில் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது சி.எ.உ (XDR) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD) ஆக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரே கடன் மீதிக்காக வேறுபட்ட கடன் நாணயங்களுக்குரிய அந்நிய செலாவணி மாற்றுவீதம் பயன்படுத்தப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட அரச கடன் மீதி ரூபா 340 மில்லியனால் அதிகரிப்பதற்கு மற்றும் ரூபா 285 மில்லியனால் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது. | 2022 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (v) | CS - DRMS 2000+ Report 854-1 அறிக்கையின் பிரகாரம் கடன் இலக்கம் 2021026 இல் ஆண்டினுள் தீர்வையாகியுள்ள கடன் பெறுமதி ரூபா 64,910.4 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 64,983.8 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூபா 73.4 மில்லியனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்தக் கடன் 2021 ஆகஸ்ட் 31 இல் செலுத்த வேண்டியிருந்தாலும், இது 2021.09.01 அன்று இலங்கை மத்திய வங்கியின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. செலாவணிமாற்று விகிதத்தில் உள்ள மாறுபாடுதான் விலகலடைகின்றது. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரச நிதிக்கூற்றுக்களில் மற்றும் 854-1 அறிக்கையின் பிரகாரம் பல்வேறு நன்கொடையாளிகளினால் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்டிருந்த கடன் மீதி அந்த நிறுவனங்களினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் மீதியுடன் ஒப்பீடு செய்யப்பட்ட போது ஐ.அ.டொலர் 1,800,227 அல்லது ரூபா 360.82 மில்லியயுடன் கூடிய 02 கடன் மீதிகள் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நன்மைகள் 2022 ஜனவரி 19 ஆந் திகதிக்குப் பிறகு தரவு கட்டமைப்பில் சேர்க்கப்படும். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (vii) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வெளிநாட்டுக் கடன் மூலங்களான CS - DRMS 2000+ Report 854-1 அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் இலக்கம் 2001042 இன் கீழ் ரூபா 240 மில்லியனான கடன் மீதியொன்று நிலவியது. அந்தக் கடன் மீதி அரச நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். CS-DRMS கட்டமைப்பில் 2018, 2019 ஆண்டுகளில் தரவுகளை நாளதுவரையாக்கும் போது ஏற்பட்ட தொழில்நுட்ப குறைபாடு காரணமாக இநடத வேறுபாடு எழுந்துள்ளது. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (viii) | இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 1,481,264 ஆன மறை கடன் மீதி அரச நிதிக்கூற்றுக்களில் அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த கடன் மீதிகள் மறைப் பெறுமதியை எடுப்பதற்கும் அந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கும் உரிய தெளிவுபடுத்தல் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2010109 கடன் தொகை 2019 யூலை மாதத்தில் செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது. உரிய அபாய அறிவிப்புகள் மற்றும் XDR மற்றும் USD இடைப்பட்ட செலாவணி மாற்ற வேறுபாடு இறுதித் தவணையில் சீராக்கப்பட்டுள்ளது.<br><br>1970016 கடன் தொகையில் 2020 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மீதியொன்று காணப்படவில்லை. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ix) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு இலக்கம் 29(i) இற்குரிய தகவல்கள் CS - DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப்பட்டிராததுடன் ரூபா 20,247 மில்லியனான அதன் பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடிய மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பு எண். 29(i) உள்ளூர் நிதி நிறுவனங்களிலிருந்து திட்டங்களுக்கு நிதியளிப்பது தொடர்பான தகவல்களை உள்ளடக்கியது. இது அறிக்கை 854-1 இல் சேர்க்கப்பட்டுள்ளது. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (x) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெளிநாட்டுக் கடன் மீதி ஐ.அ.டொலர் 34,130,219,447 ஆக காணப்பட்டது. அத்திகதியில் நிலவிய செலாவணி மாற்றவீதமான ரூபா 200.4348 உடன் சீராக்கம் செய்த போது கடன் மீதியில் ரூபாவிலான பெறுமதி ரூபா 6,841 மில்லியனாக காணப்பட்டது. 2022 மே 30 ஆந் திகதியில் உள்ளபடியான அந்நிய செலவாணி மாற்று வீதம் ரூபா 360.76 ஆனமையால் அந்த வெளிநாட்டுக் கடன் மீதியின் பெறுமதி ரூபா 12,313 மில்லியனாக காணப்பட்டது. அந்நிய செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கடன் மீதிக்கு ஏற்படும் அதிகரிப்பு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (xi) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 516,606 மில்லியனாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் மீள செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 530,507 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் கடன் தவணைகளை செலுத்துதல் ஆண்டினுள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடனின் | | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவினை விட ரூபா 13,901 மில்லியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன் அளவினை விஞ்சி வெளிநாட்டுக் கடன் செலுத்தப்பட்டமையால் ரூபா 13,901 மில்லியனான அந்நிய செலாவணி பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (xii) | திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் TO/S&A/03/08/05 ஆம் இலக்க மற்றும் 2022 பெப்ரவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் தீர்வையாகிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதி முறையே ரூபா 16,883.6 மில்லியன் மற்றும் ரூபா 21 மில்லியன் ஆகும். | 2021 ஆம் ஆண்டிற்கான போதுமான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களிடம் இல்லை என்பதும், 2021.12.31 அன்று செலவினங்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகள் சான்றுபடுத்தல் அளிக்காததும் இதற்குக் காரணம். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (xiii) | மேற்படி கடிதத்தின் இணைப்பு 03 இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதியானது ரூபா 5,671 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய உரிய வருடத்தினுள் தீர்வையாகிய போதிலும் அந்த வருடத்தினுள் சில வெளிநாட்டுக் கடன் வைத்தல்கள் இடம்பெற்றிராமை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்கான போதுமான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களிடம் இல்லை என்பதும், 2021.12.31 அன்று செலவினங்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகள் சான்றுபடுத்தல் அளிக்காததும் இதற்குக் காரணம். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (xiv) | 2022 ஏப்ரல் 21 ஆந் திகதிய SA/MAA/02/02/03/VO(iii) ஆம் இலக்கமுடைய அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய வெளிநாட்டுக் கடன் தொடர்பில் குறிப்பு இலக்கம் 29(ii), (iii) மற்றும் (iv) பிரகாரம் கணிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது மீள செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 514,154 மில்லியனாக காணப்பட்டது. எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 530,508 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய ரூபா 16,354 மில்லியனான வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. | இந்த வேறுபாடு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட கடன் நிலுவைகள் தொடர்பான கடனாளிகளுக்கு செய்யப்பட்ட கடன் திருப்பிச் செலுத்துதல் ஆகும். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (xv) | 2022 சனவரி 19 ஆந் திகதி அச்சிடப்பட்ட வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் CS-DRMS 814-1 அறிக்கைக்கமைய 19 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்கு உரியதாக தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 15,207,702,960 ஆக காணப்பட்டது. அந்தப் பெறுமதி 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 மே 19 ஆந் திகதி அச்சிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட 814-1 அறிக்கையின் பிரகாரம் அந்த 19 கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2021 ஆம் ஆண்டில் தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களாக ரூபா 39,174,043,448 காணப்பட்டது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் 2021 ஆம் ஆண்டிற்குரிய தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 23,966,340,488 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த 2021 ஆம் ஆண்டு தொடர்பான நன்மைகளும் 2022 ஜனவரி 19 ஆந் திகதிக்குப் பிறகு தரவு அமைப்பில் உள்ளிடப்படும். வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு வருமானம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்து கடனாளர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (xvi) | 2022 மே 19 ஆந் திகதி அச்சிடப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரிய 814-1 அறிக்கையின் கடன் இலக்கம் 2016028 இற்குரிய ஐ.அ.டொலர் 729,484.66 அல்லது ரூபா 146,217,030 மறை தீர்வையாதலாக கடன் உடன்படிக்கைக்குரிய செயற்திட்டத்திற்கு வழங்கிய ஆரம்ப முற்பணத்திலிருந்து செயற்திட்டம் நிறைவடைந்த போது எஞ்சிய தொகையினை மீள செலுத்துதல் உள்ளடக்கியிருந்த போதிலும் அந்த மீள் செலுத்தல்கள் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2016028 தொடர்பாக, 2021.10.25 அன்று எதிர்மறையான முடிவுகள் ஏற்பட்டுள்ளதுடன், மேலும் இது 2022 பிப்ரவரி இல் CSDRMS அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்திற்கு கொடுக்கப்பட்ட ஆரம்ப முன்பணத்திலிருந்து மீதமுள்ள தொகை மீள் கொடுப்பனவாகும். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**(ஆ) அரச கடன் கணக்கு வைக்கும் நடைமுறை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | --------------------------------- | ------------------------------ |
| | அரச கடன் உடன்படிக்கைகளுக்காக அரச கணக்குகள் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் கணக்கீட்டு நடைமுறை / அடிப்படைகள் அவ்வவ்போது மாற்றமடைதல் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தன்மை பாதுகாக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | திறைசேரி பிணை முறிகளின் ஆகக்குறைந்த விலையினை கணக்கு வைக்காத காரணத்தினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 318,246 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த ஆகக்குறைந்த விலைகளை கணக்கு வைப்பதற்காக ரூபா 318 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட | 2020.12.31 நிலவரப்படி, மேலும் முதிர்ச்சியடையவிருந்த திறைசேரி பிணைமுறிகளின் குறைந்தபட்ச தொகையான ரூபா 291,166 மில்லியன் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிதி தொடர்பான பத்திரங்கள் முதிர்ச்சியடையும் போது, ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படும். | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டியதாக காணப்பட்ட போதிலும் நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் அவ்வாறானதொரு பெருந்தொகையான நிதியேற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் பாதீட்டு பற்றாக்குறை அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றமையால் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட பிணைமுறிகளுக்குரிய ஆகக்குறைந்த விலை அந்த பிணை முறிகள் முதிர்வடையும் ஆண்டில் சீராக்கல் செய்வதற்கும் அது வரையிலும் நிதிக்கூற்றுக்களில் பதிவொன்றாக அந்த பிணை முறிகளில் முகப்பெறுமதியினை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அவ்வாறு நிதியேற்பாட்டினை பெற்றுக்கொள்ளாது அந்த பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதி 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | | |
| (ii) | 2020 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் மத்திய வங்கியின் முற்பணங்கள், உள்நாட்டுக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டு அதற்குரிய காரணங்களும் முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டின் போது அந்த மத்திய வங்கி முற்பண மீதி ரூபா 150.1 மில்லியனானது உள்நாட்டுக் கடன் | நிதிநிலை அறிக்கைகளை நியாயமாக முன்வைப்பதற்காக, மத்திய வங்கியின் முன்பணங்கள் உள்நாட்டு கடன் வகைப்பாட்டில் இருந்து நீக்கப்பட்டு தனியானஉருப்படியாக காட்டப்பட்டது. | அரச கடன் பெறுவனவு மற்றும் சேவைப்படுத்தல் உரியமுறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். | |

வகைப்படுத்தலிலிருந்து அகற்றப்பட்டு தனியானதொரு உருப்படியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) வெளிநாட்டு உதவிகளை கணக்கு வைத்தல்**

1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் வெளிநாட்டுக் கடன் வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 ஆம் ஆண்டின் பொதுத்திறைசேரிக்கு அறிவிக்காது 2 நிறுவனங்களினால் 7 செயற்திட்டங்களுக்காக ரூபா 24.77 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு நன்கொடைகள் நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த நன்கொடைகள் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுக் கணக்குச் சுற்றறிக்கை இலக்கம் 30/94 இன் படி, வெளிநாட்டு உதவிகளைப் பெறுவது குறித்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கேட்கப்பட வேண்டும். வெளிநாட்டு உதவி தொடர்பான பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவோ அல்லது தொடர்புடைய நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கவோ திணைக்களத்திற்கு அதிகாரம் காணப்படவில்லை. | கிடைத்துள்ள அனைத்து வெளிநாட்டு மானியங்களும் அரசின் நிதிக்கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ii) | 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் கொவிட் 19 தொற்றுநோய் பரவல் ஆரம்பித்ததுடன் பல்வேறு வெளிநாட்டு அரசுகள், உள்நாட்டு/ வெளிநாட்டு நிறுவன / அமைப்புக்கள் / நபர்கள் மற்றும் உள்நாட்டு / வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புக்களினால் சுகாதார அமைச்சிற்கும் அதன் கீழுள்ள மருத்துவமனைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறுமதி மதிப்பிடு செய்யப்பட்ட நிதி மற்றும் நிதியல்லாத | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின்படி, வெளிநாட்டு உதவி மானியங்களை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக மாத்திரம் பெறுவது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். இது தொடர்பாக அனைத்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு தகவல் | கிடைத்துள்ள அனைத்து வெளிநாட்டு மானியங்களும் அரசின் நிதிக்கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உதவிகள் / பெறுமதிகளாக ரூபா 1,949 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் அந்த நன்கொடைகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருக்கவில்லை. அவ்வாறே 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த 162,465 பொருள் உருப்படிகளின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்களை ஆவணப்படுத்துவது அவர்களின் பொறுப்பாகும், மேலும் அவ்வாறு செய்யத் தவறியதால், இந்த உருப்படிகள் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படவில்லை. |

**(ஈ) அரசிற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதன பங்களிப்பு**

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசுக்குச் சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு ரூபா 760,777.41 மில்லியனாக காணப்பட்டதுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரசினால் வழங்கப்பட்ட உப கடன் வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியினால் செலுத்தப்படாதிருந்ததுடன் திறைசேரியினால் அந்தக் கடன் தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பதிவழிக்கப்பட்டிருந்த வருமானம் அந்த கம்பனியின் மூலதனத்திலிருந்து அரசின் பங்களிப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கொடுக்கல் வாங்கல் வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் நிதியேற்பாட்டினை பெற்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு | மீளாய்வாண்டில் இந்த உரிமைப் பங்களிப்புகளைக் கணக்கிடுவதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 21/0199/323/012 ஆம் இலக்க மற்றும் 2021.01.11 ஆந் திகதி விவசாய அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் மற்றும் தீர்மானத்தின் பிரகாரம் துணைக் கடன் மற்றும் அது தொடர்பான வட்டியை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | திரண்ட நிதியத்திற்கு சுமையாக இருக்கும் செலவினங்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெற்றமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ii) | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் பங்குரித்துடைய பொது முயற்சிகள் மற்றும் 13 கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடியான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பானது ரூபா 439,639 மில்லியனாக காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி 411,874 மில்லியனாக காணப்பட்டமையால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களினுள் அரச மூலதன பங்களிப்பு ரூபா 27,765 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசாங்கத்திற்கு சொந்தமான 05 வரையறுக்கப்பட்ட கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடியான மீதி உறுதிப்படுத்தல்களில் அரசின் மொத்த மூலதன பங்களிப்பின் பெறுமதி குறிப்பிடப்பட்டிராததுடன் பங்கொன்றின் சந்தைப் பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அரச நிதிக்கூற்றுக்களில் அந்த நிறுவனங்களின் பங்குடமை பெறுமதி பங்குகளில் பெயரளவுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்டு ரூபா 48 மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள வேறுபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகளுக்கு வழங்கப்படும் மூலதனப் பங்களிப்பு முறையாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**(உ) வாடகை மற்றும் பணி முற்பணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தலைப்பு 290 - கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வாடகை மற்றும் பணி முற்பண மீதி ரூபா 8,518,925 ஆக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் அந்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் கணக்கின் மீதியொன்று காணப்படவில்லை. | இந்த வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் கணக்கின் மீதி அரச நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் ஏனைய நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

**(ஊ) திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட முற்பணங்கள்**

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட முற்பண கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகையாக ரூபா 15,727,677,353 காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி முற்பணக் கணக்கின் கீழ் ரூபா 1,373 மில்லியன் ஆன வரவு மீதியும் ரூபா 20 மில்லியன் கூட்டுத்தொகையான செலவு மீதியும் நிலவியது. அந்த மீதிகள் தொடர்பில் தொடர்ச்சியாக கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட ஐய வினாக்களில் நி.பி. 518 பிரகாரம் செயற்பட்டு அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றுள் மூன்று முற்பணக் | நி.பி. 518 பிரகாரம், கணக்கை பராமரிக்கும் அமைச்சு அல்லது திணைக்களத்தினால் கணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். 2004 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த தகவல் தொடர்பான வன் பிரதிகள் அழிக்கப்பட்டதால், தகவல்களைப் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன. 2022 ஏப்ரல் மாதமளவில் 3 கணக்குகள் தீர்க்கப்பட்டு, 7 கணக்குகளுக்கு தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது. | செயலிழந்த கணக்குகளில் உள்ள நிலுவைகளை சரிபார்த்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளின் மீதிகள் 2022 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டு மூடப்பட்டிருந்தது. எஞ்சிய முற்பணக் கணக்குகளின் மீதிகள் 2022 மே 19 ஆந் திகதி வரையிலும் முடிவறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | தலைப்பு 111 - சுகாதார அமைச்சின் கீழ் ரூபா 1,221,650,996 தொகையான களஞ்சிய மற்றும் ஏனைய முற்பணங்கள் கணக்கில் ஆரம்ப மீதியொன்று நிலவிய போதிலும் அதற்குரிய காரணங்களை வினவிய போது எதுவித அடிப்படையொன்றினை கொண்டிராது பெயரளவில் இந்த மீதிகள் பேணிச் செல்லப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்குரிய கணக்காய்வு ஐயவினாக்கள் வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2022 மே 20 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பழைய பரிவர்த்தனைகள் தொடர்பான திறைசேரிப் பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டு, சுகாதார அமைச்சுக்கு தகவல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயலிழந்த கணக்குகளில் உள்ள நிலுவைகளை சரிபார்த்து தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டியமை. |

**(எ) நிதி அல்லாத சொத்துக்கள**

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியல்லாத சொத்துக்களின் கீழ் ரூபா 1,850,007 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 மார்ச் 20 ஆந் திகதிய MF/NB/01/CM/2017/85 ஆம் இலக்க “பாதுகாப்பு அமைச்சினால் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மற்றும் வட்டியை | நிதி அல்லாத சொத்துக்களைக் கணக்கிடுவதற்குத் தேவையான அறிவுரைகள் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன, மேலும் அவற்றின் சொத்துக்களை முறையாகக் | அரசின் அனைத்து சொத்துக்களும் கணக்கில் வைக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் உள்ளடக்குதல்’’ எனும் தலைப்பில் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் ஆளடையாளங்கள் பொதுச் செயலாளர் அலுவலகத்தின் கட்டிடத்தில் பெறுமதி அரச சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்காக அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமப/17/0632/719/062 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 13 ஆந் திகதி வரையிலும் அந்த சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கிடுவதற்கான பொறுப்பு, சம்பந்தப்பட்ட செலவினத் தலைப்பின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | |
| (ii) | 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் அரச முதலீடுகளாக ரூபா 8,199 பில்லியன் அளவானது காசுப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களில் தீர்மானங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2021 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களாக அவற்றுள் ரூபா 1,850 பில்லியன் மாத்திரம் சொத்துக்களாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அந்த செலவினங்களினுள் ரூபா 173 பில்லியன் உப கடனும், அரச முயற்சிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பாக ரூபா 761 மில்லியனுமாக ரூபா 934 | காசப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது வாங்குதல் மற்றும் பணப்புழக்க அறிக்கையில் மற்ற முதலீடுகளைப் பெறுதல் ஆகியவற்றின் கீழ் அனைத்து பொருட்களிலும் மூலதன சொத்துக்களின் புனரமைத்தல் மற்றும் மேம்பாடு, மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் பிற மூலதன செலவுகள் ஆகியவை அடங்கும். இந்த பொருட்களில், மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துவதன் கீழ் உள்ள செலவுகள் மட்டுமே நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. | காசப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கையகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்களின் அளவும் நிதி நிலை அறிக்கையின் நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்களின் தொகுதியின் கீழ் கணக்கிடப்பட வேண்டும். |

பில்லியன் கூட்டுத்தொகையான நிதிச் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிதி மற்றும் நிதியல்லாத சொத்துக்களாக ரூபா 2,784 பில்லியன் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 8,199 பில்லியனால் ரூபா 5,415 பில்லியன் அல்லது 66 சதவீதம் பெறுமதியான சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு தவறியிருந்தது. 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் அது 2015 ஆம் ஆண்டு முதல் கணக்கு வைத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**(ஏ) திறைசேரி பிணைமுறிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் 2021 மார்ச் 31 ஆந் திகதியளவில் நிலவிய ரூபா 371,734 மில்லியனான திரண்ட நட்டத்திற்காக அந்த கம்பனியை மீள்கட்டமைக்கும் வரையிலும் நடைமுறையில் உள்ள வகையில் திறைசேரியின் செயலாளரின் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதிய | 2016 ஆம் ஆண்டு முதல், நிவாரணக் கடிதங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன, மேலும் இது வழக்கமாக வழங்கப்படும் கருவூல உத்திரவாதத்திலிருந்து வேறுபடுவதால் உத்தரவாதப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் துல்லியமான மற்றும் புதுப்பித்த தகவலுடன் தயாரிக்கப்பட வேண்டும். |

PED/S/SLA/1/11(ii) ஆம் இலக்க சான்றுப்படுத்தும் கடிதத்தின் மூலம் திறைசேரியின் பிணையொன்றினை வழங்கியுள்ளமை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த பிணையானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) செயலற்ற கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் 02 கணக்குகளுக்குரியதாக ரூபா 1,007 மில்லியன் மீதிகள் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன. அவ்வாறே அரச முற்பண செயற்பாடுகளுக்குரிய கணக்குகளில் பல வருடங்களாக தீர்ப்பனவு செய்யப்படாது ரூபா 8,792,222 கூட்டுத்தொகையான தேறிய மீதிகள் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த மீதிகளில் ரூபா 233,298 கூட்டுத்தொகையான மறைமீதிகளும் காணப்பட்டன. | இந்தக் கணக்குகளைத் தீர்ப்பதற்குத் தேவையான அறிவுரைகள் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. | நீண்ட கால நிலுவைகளை சரிபார்த்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ள உண்மையான நிலுவைகளை மட்டுமே கணக்கீடு செய்தல். |

**(ஒ) நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று ஆகியவற்றுக்கிடையே பொருத்தமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிதி செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று தொடர்பிலான கூற்றுக்களிடையே நேரடியான தொடர்பொன்று காணப்படவில்லை. அதாவது நிதிச் செயலாற்றல் கூற்றினுள் முழுமையாக மீளாய்வாண்டின் பாதீட்டிற்குரிய உள்ளபடியான நிலைமைகள் மாத்திரம் | 2021 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்ட மாதிரியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் | நிதி நிலைமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்று ஆகியவற்றுக்கு இடையிலான உறவை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ஒரு வருடத்திற்குரிய பற்றாக்குறைகள் அல்லது மிகைகள் கணக்கிடப்பட்டு அந்த பற்றாக்குறை அல்லது மிகை நிதிநிலைமைக் கூற்றுக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று தொடர்பற்றுக் காணப்பட்டது. | கணக்கீட்டு சட்டகம் மற்றும் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகளை தயாரிக்கும் போது கணக்காய்வு மூலம் காட்டப்படும் நிலைமை சரி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | |

## (ஓ) நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் நியதிச் சட்ட மற்றும் ஏனைய நிதியங்களின் கூட்டுத்தொகை ரூபா 14,979 பில்லியன் கூட்டுத்தொகையான வரவு பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மூலதன மாற்றங்கள் கூற்றில் ரூபா 939 பில்லியன் வரவு பெறுமதியொன்று மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது மூலதனம் தொடர்பில் நேரடியாகவும் பொறுமையாகவும் தாக்கம் செலுத்தும் தேறிய சொத்துக்களின் சீராக்கல்களை கணக்கின் வரவு மீதியான ரூபா 14,040 பில்லியன் பெறுமதியானது மூலதனத்தினாலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கு நியதிச்சட்ட அல்லது ஏனைய நிதியமாக கருதப்படாமையால், அது மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்படவில்லை.<br><br>எவ்வாறான போதிலும், தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கிற்குரிய பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 26 இன் கீழ் விரிவாக குறிப்பிடடப்பட்டுள்ளது.<br><br>மூலதனத்திலுள்ள ஒவ்வொரு ஒதுக்கங்களினதும் / நிதியத்தினதும் தன்மை மற்றும் நோக்கம் தொடர்பான தெளிவுபடுத்தல் குறிப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஔ) சொத்துக்கள் மற்றும் சொத்துக்களின் வகைப்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதது என வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக்கூற்றினை பயன்படுத்துவோருக்கும் மற்றும் அது தொடர்பில் அக்கறை காண்பிக்கும் தரப்பினருக்கும் எதிர்வரும் வருடத்தில் அரசினால் செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய வெளிவாரி பொறுப்புக்களின் அளவு தொடர்பில் விரிவான விளக்கமொன்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள கணக்கீட்டு சட்டகம் மற்றும் நியமத்தின் பிரகாரம் உரிய வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டும். |

**(க) மொத்த சொத்துக்களை விட மொத்த வெளிவாரி பொறுப்புகள் அதிகரித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிநிலைமை கூற்றின் பிரகாரம் மொத்த வெளிவாரி பொறுப்புக்களின் பெறுமதியானது ரூபா 17,817 பில்லியன் ஆன போதிலும் அதற்கு ஒப்பாக மொத்த சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 2,838 பில்லியன் மாத்திரமாக காணப்பட்டமையால் மொத்த சொத்துக்களை விட மொத்த வெளிவாரி பொறுப்புக்கள் ரூபா 14,979 பில்லியனால் விஞ்சியிருந்தது. | அரசாங்கத்திற்கு சொந்தமான மொத்த நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்பு இன்னும் முழுமையாக கணக்கிடப்படவில்லை. மேலும், அரசாங்கக் கடமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பணத்தைப் பயன்படுத்தி பெறப்பட்ட அல்லது கட்டப்பட்ட சில சொத்துக்கள் அந்தந்த அரசாங்க நிறுவனங்களின் நிதி அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட ஒட்டுமொத்த பொதுத்துறைக்கான ஒருங்கிணைந்த கணக்குகளை தயாரிக்கும் போது இந்த நிலைமை தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | அரசுக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் கணக்கில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(கா) வெளிநாட்டு நாணய அலகிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச நிதிக்கூற்றுக்களின் முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டு கொள்கைளின் கீழ் (Significant Accounting Policies) வெளிநாட்டு பயன்பாட்டு நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான கொள்கையில் அந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் அந்நிய செலாவணி மாற்ற வேறுபாடுகள் (Exchange Differences) / அந்நிய செலாவணி பரிமாற்றல் இலாபம் அல்லது நட்டம் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கணிப்பிடப்பட்ட ரூபா 363,648 ஆன அந்நிய செலாவணி பரிமாற்றல் நட்டமானது நிதி நிலைக்கூற்றில் தேறிய சொத்துக்களில் சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | அரசின் நிதிக்கூற்றுக்களில் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் (Significant Accounting Policies) இன் கீழ், வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகளில் தொடர்புடைய பரிமாற்ற வேறுபாடுகள் நிதி செயலாற்றல் அறிக்கையில் திருத்தப்படுவதாக குறிப்பிடப்படவில்லை மற்றும் தொடர்புடைய பரிமாற்ற வேறுபாடுகள் முக்கிய பேரேட்டுக் கணக்குகள் மூலம் சரிசெய்யப்படுகின்றன என்று கூறப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டும். |

**(கி) பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச நிதிக்கூற்றுக்களில் காணிகள், புத்துருவாகும் வேலை நீங்கலாக ரூபா 700,951 மில்லியன் கூட்டுப்பெறுமதியுடைய நிதியல்லாத சொத்துக்களுக்காக அந்த சொத்துக்களில் பெறுமானத்தேய்விடக்கூடிய பெறுமதியானது அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் கிரமமான முறையில் ஒதுக்கப்பட்டு முன்னோக்கிய கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த சொத்துக்கள் கழிவுப்பெறுமதி மற்றும் பயன்படு | அரசாங்கத்திற்குச் சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் கண்டறிந்து கணக்கீடு செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேலும் அந்த செயல்முறையை முடித்து, முன்மொழியப்பட்ட கணக்கீட்டு சட்டகம் மற்றும் நியமங்கள் அறிமுகப்படுத்திய பின்னர் பொருத்தமான தேய்மானக் கொள்கையை (Depreciation Policy) | நிதிக்கூற்றுக்கள் சரியான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஆயுட்காலம் கணிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கமைய இந்த சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட அழிவு நட்டம் காணப்படின் அதனை கழித்த பின்னர் கிடைக்கும் கொண்டு செல்லும் பெறுமதி (Carrying Amount) தொடர்பில் அரச நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு திட்டவட்டமான விளக்கமொன்றினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |

**(கீ) மிகைச் செலவினம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மற்றும் 2020 இன் 7 ஆம் இலக்க வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு திருத்தப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும், தலைப்பு 422 – தஹாம் பாடசாலைகள், பிரிவென்கள் மற்றும் பிக்குமாரின் கல்விக்கான இராஜாங்க அமைச்சின் 422-2-3-3-1001 ஆம் இலக்க செலவினத் தலைப்பிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,280,318,000 ஆன தேறிய நிதியேற்பாடு ரூபா 74,355,089 இனால் விஞ்சி ரூபா 3,354,673,089 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய அந்த செலவினத் தலைப்பில் ரூபா 74,355,089 ஆன மிகைச் செலவினமொன்று வெளிப்படுத்தப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் விதிகளின்படி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை முறையான திருத்தங்கள் இல்லாமல் அந்த விதிகளுக்கு அப்பால் செலவிடக்கூடாது. |

**(கெ) எல்லைகள் பின்பற்றப்படாமை**

2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பட்டோலையின் கீழான முற்பண பணிகளுக்கான பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள எல்லைகள் திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் பின்பற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அதிகாரச்சட்டத்தின் 8(1)(ஆ) பிரிவின் பிரகாரம் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அந்த எல்லைகளை திருத்த வேண்டியதாக காணப்பட்ட போதிலும் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த எல்லைகள் திருத்தப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரசின் அமைச்சொன்றின் மற்றும் மாவட்ட செயலகமொன்றில் 02 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணப் பணிகளுக்கு உரிய உச்ச செலவின எல்லை முறையே ரூபா 32,000,000 மற்றும் ரூபா 17,000,000 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த அமைச்சு மற்றும் அலுவலகங்களால் முறையே ரூபா 1,401,679 இனால் மற்றும் ரூபா 208,590 இனால் விஞ்சி முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட எல்லையினுள் செயற்படுதல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | ஒதுக்கீட்டு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எல்லைகளினுள் செயற்பட வேண்டும். |
| (ii) | மேலும் ஒரு இராஜாங்க அமைச்சிற்கு உரியதாக அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணப் பணிகளுக்கு ரூபா 525,000,000 ஆன உச்ச செலவின எல்லை விதிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவற்றின் ரூபா 457,952,411 ஆன பெறுவனவுகள் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ரூபா 67,047,589 இனால் எல்லை அண்மிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | 2021 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்படாத இரு ஆணைக்குழு அலுவலகங்களுக்காக வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் ஊடாக இரு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணப் பணிகளுக்கு முறையே ரூபா 500,000 மற்றும் ரூபா 200,000 படியாக ஆகக் குறைந்த பெறுவனவு எல்லைகள் விதிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றிலிருந்து எந்த பெறுவனவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | மேலும் ஒரு இராஜாங்க அமைச்சிற்கு உரியதாக உச்ச வரவு மீதியின் எல்லை ரூபா 20,000,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த மீதி ரூபா 24,602,727 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், வரவு மீதி எல்லை ரூபா 4,602,727 இனால் விஞ்சியிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**(கே) எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு எரிபொருள் பிழை உறுதிப்பாட்டு நிதியத்திலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிட வேண்டிய ரூபா 26,673,196,758 தொகை 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்பொன்றாக (மறைப் பெறுமதி) காண்பிக்கப்பட்டு பல்வேறு கணக்குகளின் கீழ் எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் கணக்காக பெயரிடப்பட்டு தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்தக் கணக்கு ஒரு பொதுப் பேரேடு கணக்கு என்பதால், நிதிக்கூற்றுகளில் பல்வேறு கணக்குகளின் கீழ் இது காட்டப்படுகிறது. | நிதிக்கூற்றுகளில் சரியான தகவல்கள் சேர்க்கப்பட வேண்டும். |

**(கை) அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2005 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு மாதிரிகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் 254 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் 10 வருடங்களினுள் தற்போது பயன்படுத்தப்படும் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படை முறைமையிலிருந்து அட்டுறு அடிப்படையில் கணக்கு வைத்தலின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட வீதித் திட்டம் (Road Map) உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்குரிய காலச்சட்டகம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் திருத்தப்பட்ட போதிலும் அதற்கான முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சரவை குறிப்புக்கமைய ஒவ்வொரு வருடமும் நிறைவடைந்து ஒரு மாதம் கடந்த பின்னர் குறித்த செயன்முறையின் செயல்முன்னேற்றம் அமைச்சரவைக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2022 மே 20 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. செயன்முறையை மாற்றும் நடவடிக்கை தொடர்பில் திட்டவட்டமான கொள்கை தீர்மானமொன்றை மேற்கொள்ளல் பின்னர் உரிய திருத்தப்பட்ட வீதித் திட்டத்திற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நிதிக்கூற்றுகளில் சரியான தகவல்கள் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது பின்வரும் பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரை | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் மற்றும் எரிபொருள் விலையினை ஸ்திரப்படுத்தும் நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்கத்தின் சகல பெறுகைகளும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த இரண்டு நிதியத்திற்கும் முறையே ரூபா 367,645,984 மற்றும் ரூபா 728,619,709 தொகையான பணம் கிடைத்திருந்ததுடன் அந்த பெறுவனவுகள் நிதிய கணக்கு இரண்டிற்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது COVID 19 சமூக பாதுகாப்பு நிதியத்தின் கீழ் ரூபா 93,575,980 செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் நிதியக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத நிதியக் கணக்கு இரண்டிலும் கணக்கீடு செய்யப்பட்ட இந்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் திரண்ட நிதியத்திற்கு புறம்பாக திறைசேரியின் பிரதான பேரேட்டுக் கணக்கின் கீழ் | பதில் வழங்கப்படவில்லை. | அரசியலமைப்பு பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | திறைசேரியால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டம் | (i) | 2021 இன் 12 ஆம் இலக்க மற்றும் 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரகாரம் ஏதாவது வருடமொன்றின் இறுதியில் காணப்படக்கூடிய ஆகக்கூடிய பொறுப்புக்களின் பெறுமதி அந்த ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தை விஞ்சமுடியாதிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த எல்லை 109.87 சதவீதமாக காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்ற.<br><br>பொதுத்திறைசேரியின் பிணையின் அடிப்படையில் பொது முயற்சிகளினால் பெறப்படக்கூடிய கடன்களுக்காக வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பிணை மற்றும் சலுகை கடிதங்களின் பெறுமதியான ரூபா 1.58 பில்லியன் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாட்டுக் கூற்றின் பிரகாரம் ரூபா 334 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் மேற்கூறப்பட்ட | சட்டத்தின் படி, அரசாங்கத்தின் கடன் பொறுப்பு வரம்பை மீறுவது பற்றி 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு அதன் மூலம் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படும். | சட்டத்தின் விதிகளின்படி செயல் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | | (ii) 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட இடைவெளி, மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை விஞ்சாத வகையில் மதிப்பீடு செய்வதற்கும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான வரவு செலவுத் திட்ட இடைவெளி, மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை விஞ்சாத வகையில் பேணிச் செல்வதற்கும் நிதியமைச்சு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அந்த சதவீதம் முறையே மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட இடைவெளிக்குரிய 18.48 சதவீதம் மற்றும் உள்ளபடியான இடைவெளிக்குரிய 12.59 சதவீதமுமாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது. | இங்கே பாதீட்டு இடைவெளி என்பது பொருளாதார வகைப்பாட்டின் படி சரிசெய்யப்பட்ட பாதீட்டு இடைவெளி ஆகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை நோக்கி செல்வது கடினமான சூழ்நிலையாக இருந்தால், அதற்கான காரணங்கள் மற்றும் சட்டத்தின் படி எதிர்கால வேலை ஏற்பாடுகள் குறித்து பாராளுமன்றத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இறுதி வரவு செலவுத் திட்ட நிலவரம் குறித்த அறிக்கையில் அந்த விடயங்கள் விளக்கப்படும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் முறையான பிரகாரம் பெறப்பட்ட பொருட்கள், சேவைகள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்காக மேலும் செலுத்த வேண்டிய பெறுமதி பொறுப்பாக | தொடர்புடைய செலவுத் தலைப்புகளின் மூலம் CIGAS கணக்கியல் அமைப்பில் உள்ளிடப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகளின் மதிப்புகள் அரசாங்கத்தின் | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் படி செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அர்த்தப்படுத்தப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் 2(இ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத கடப்பாடுகள் எதிர்வரும் வருடத்தின் போது அந்த பொறுப்புக்களுக்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தால் மாத்திரமே எதிர்வரும் ஆண்டிற்கு கொண்டு செல்ல முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் பொறுப்புக்கள் அந்த ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்தமையால் பொறுப்புக்கள் எதிர்வரும் வருடத்திற்கு கொண்டு செல்ல முடியாதிருந்தமை சுற்றறிக்கையின் ஆலோசனையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக ரூபா 334 பில்லியன் கூட்டுமொத்தம் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது.<br><br>பொறுப்புகள் மற்றும் பொறுப்புகளை அறிக்கையிடுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மாநிலக் கணக்குத் துறையால் வழங்கப்பட்டுள்ளன , மேலும் அந்த அறிவுறுத்தல்களின் படி பொறுப்புகள் மற்றும் பொறுப்புகளை அறிக்கையிடுவதற்கு தொடர்புடைய செலவுத் தலைப்பின் பிரதான கணக்கீட்டு உத்தியேதாகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | |
| (ஈ) | 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 6003 தொகுதியில் வைப்புக் கணக்கினை பூச்சியமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் அந்த செயற்பாடுகள் வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும், இலக்கம் 6003 இன் கீழ் வருகின்ற வைப்புக் கணக்கில் ரூபா 10 மில்லியன் தொகையான மீதியொன்று 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | கொழும்பு மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தவறான கணக்கீடு காரணமாக இந்த நிலுவை ஏற்பட்டுள்ளதாகவும் , திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் படி செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 373 | நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் திணைக்களங்களில் 110 கட்டுநிதிக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,277 மில்லியன் வரவு மீதி தீர்க்கப்படாது காணப்பட்டதுடன், அதில் 10 கட்டு நிதிக் கணக்குகளின் கூட்டுமொத்தம் 481.8 மில்லியன் மீதி பலவருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம், கட்டுநிதி கணக்குகளை இணக்கம் செய்து திறைசேரிக்கு பணம் தீர்ப்பனவு செய்யும் பொறுப்பு உரிய நிறுவனததின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரை யே நேரடியாக சாரும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமானங்களை மதிப்பீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 16,809 பில்லியன் ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 15,027 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 1,782 பில்லியனால் அதாவது 11.86 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் பின்பற்றப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானம் ரூபா 1,984 பில்லியன் ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது 1,547 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டினை விட | 2021 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூபா 1,994.4 பில்லியன் (வரி வருவாய், வரி அல்லாத வருவாய் மற்றும் வெளிநாட்டு மானியங்கள் உட்பட) மற்றும் உண்மையான வருவாய் ரூபா 1,489.0 பில்லியன். இது மதிப்பீட்டில் சுமார் 74.7 சதவீத சாதனையாகும். 2021 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,525.4 பில்லியன் | வருமானங்கள் சரியாக மதிப்பிடப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் அவற்றைத் திருத்தும்போது பட்ஜெட் பற்றாக்குறைக்கு எவ்வாறு நிதியளிக்கப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

அரசாங்கத்தின் வருமானம் ரூபா 437 பில்லியனால் அதாவது 28.26 சதவீதத்தால் அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வரவு செலவுத் திட்ட நிலுவை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆரம்ப வருமான மதிப்பீடு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் ரூபா 1,506 பில்லியன் வரை ரூபா 478 பில்லியனால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. அந்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.73 சதவீதமாக இருந்தது. வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் வருமானம் மிகை மதிப்பீடு செய்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் வருமானம் ரூபா 1,467 பில்லியனாக இருந்ததுடன் அது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டை விட ரூபா 39 பில்லியனால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீடுடன் ஒப்பிடும் போது அந்த குறைவு ரூபா 517 பில்லியனாக இருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலவீச்சில் ஒவ்வொரு வருடத்தின் போதும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானத்தின் குறைவு 9.51 சதவீதம் முதல் 26.08 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. அந்த காலப்பகுதியின் அதிகரிப்பின் சதவீதம் மீளாய்வாண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.
நிதிப்பிரமாணம் 85(2)(ஆ) இன் திருத்தப்பட்ட வருவாய் மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் இது 97.6 வீதமான மிக உயர்ந்த சாதனையாகும். மேலும், 2020ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டில் உண்மையான அரசாங்க வருவாய் மற்றும் மானியங்கள் 6.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளன.

அரசாங்க வருவாயில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் முக்கியமாக பேரினப் பொருளாதாரப் குறிகாட்டிகள் மற்றும் போக்குகளால் பாதிக்கப்படுகின்றன.

திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு எதிர்வரும் ஆண்டுக்கான பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்படும்.

பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்காக அரச நிதி கொள்கை திணைக்களத்திற்கு அறிக்கையிடல் மாத்திரம் குறிப்பிடப்பட்டமையால் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையால் வருமானம் சாத்தியமானதாக மதிப்பீடு செய்யும் பொறுப்பில் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.2 வருமான பற்றாக்குறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 1,290 பில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது ரூபா 1,304 பில்லியனாக இருந்தது. 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலவீச்சில் ஆகக்கூடிய வருமானத்தின் பற்றாக்குறை 2020 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்த காலவீச்சில் ஒவ்வொரு வருடத்திலும் சேகரிக்கப்பட்ட வருமானம் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினங்களை ஈடுசெய்வதற்கு தவறியிருந்தது. வருமானத்தின் பற்றாக்குறையின் ஆகக்குறைந்த பெறுமதி 2007 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது ரூபா 43 பில்லியனாக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 7.56 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அந்த காலவீச்சில் ஒட்டுமொத்த | பொருளாதார பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்படும் வருமானம், செலவு மற்றும் பாதீட்டு பற்றாக்குறை ஆகியவை பொருளாதார வகைப்பாட்டின் படி சரிசெய்யப்படுகின்றன. அந்த வகைப்பாட்டின் படி, மானியங்கள் உட்பட 2021 ஆம் ஆண்டின் உண்மையான வருமானம் ரூபா 1,464 பில்லியன் மற்றும் மொத்த செலவு ரூபா 3,522 பில்லியன். இதில், தொடர் செலவினமாக ரூபா 2,748 பில்லியன் மற்றும் ரூபா 774 பில்லியன் ரூபா முன்செலவு மற்றும் கடனாக உள்ளது. இதன்படி, பயனற்ற கணக்கின் மீதி ரூபா 1,290 பில்லியன் ஆகும். குறிப்பாக, கடன் வட்டி செலுத்துவதில் தொடர்ந்து அதிகரித்து வருவதே இதற்குக் காரணம். | வருமானப் பற்றாக்குறையை குறைக்க, வருவாயை சேகரித்து சிக்கனமாக செலவு செய்ய முயற்சி எடுக்க வேண்டும். |

வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 4,780 பில்லியனாக இருந்தது. அந்த பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த காலவீச்சில் உள்நாட்டுக் கடன் ரூபா 16,265 பில்லியனும், வெளிநாட்டுக் கடன் ரூபா 6,704 பில்லியனும் மற்றும் வெளிநாட்டு மானியம் ரூபா 213 பில்லியனுமாக கூட்டுமொத்தமாக ரூபா 23,183 பில்லியன் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டின் போதும் அவ்வாறு பெறப்பட்டிருந்த கடன்கள் மற்றும் மானியங்களில் 6.86 சதவீதம் முதல் 45.59 சதவீதம் வரையிலான வீச்சில் சதவீதத்தினால் வருமானத்தின் பற்றாக்குறை நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது. பெறப்பட்ட கடன்கள் மற்றும் மானியங்களிலிருந்து முதலீடுகள் மேற்கொள்ளப்படாமல் மீண்டெழும் செலவினங்களை தீர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது 20.23 சதவீதமும், 2020 ஆம் ஆண்டின் போது 45.59 சதவீதமும் மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது 42.41 சதவீதமும் ஆக பயன்படுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது ரூபா 1,048 பில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் அது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 38.02 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. முன்னைய ஆண்டின் போது வட்டி செலுத்ததல்கள் ரூபா 975 பில்லியன் தொகை அதாவது மொத்த மீண்டெழும் செலவினத்தின் 36.36 சதவீதமாக இருந்தது. வட்டி செலுத்துதல்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 73 பில்லியனால் அதிகரித்திருந்தது. 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 151 பில்லியன் தொகையான வட்டி கொடுப்பனவுகள் 2021 ஆம் ஆண்டு வரையில் அது ரூபா 1,048 பில்லியன் வரை 594 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வரவு செலவுத் திட்ட

இந்த பற்றாக்குறை வருவாயைத் தொடர்ந்து வசூலிப்பதற்கு சம்பந்தப்பட்ட வருவாய்த் தலைப்புகளுக்கு நேரடியாகப் பொறுப்பான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் அனைத்து அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் ஏனைய அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் இதற்கு நேரடியாகப் பொறுப்பாவார்கள் ஆவர்.

பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காக கடன் பெற்று அதற்காக ஏற்படுகின்ற வட்டி செலுத்ததல்கள் வருடாந்தம் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 1,467 பில்லியன் அரசாங்கத்தின் வருமானத்தில் ரூபா 1,048 பில்லியன் தொகை அதாவது 71.74 சதவீதம் வட்டி செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது. இந்த நிலைமை உரிய காலப்பகுதியின் போது வருடாந்தம் அதிகரித்து சென்றிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் அது விரைவாக அதிகரித்திருந்தது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் 2021 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ரூபா 620 பில்லியன் வருமானம், சேகரிக்கப்படாமல் நிலுவையாக காணப்பட்டது. அந்த வருமானத்தை 2021 ஆம் ஆண்டின் போது சேகரிப்பதற்கு முடியுமாக இருக்குமாயின் அந்த ஆண்டின் வருமான பற்றாக்குறை ரூபா 670 பில்லியன் அதாவது 51.94 சதவீதத்தால் குறைக்கக்கூடியதாக இருக்கும். அந்த நிலுவை வருமானம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 698 பில்லியன் மற்றும் ரூபா 579 பில்லியனாக இருந்தது. அந்த ஆண்டுகளிலும் அந்த நிலுவை வருமானத்தை சேகரிக்க கூடிய நிலைமை காணப்பட்டிருக்குமாயின் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 165 பில்லியன் வருமானத்தில் மிகையொன்றை ஏற்படுத்த முடியுமாக இருக்கும். 2020 ஆம் ஆண்டின் போது வருமானத்தின் பற்றாக்குறை 606 பில்லியன் வரை 46.47 சதவீதத்தால் குறைப்பதற்கு முடியுமாக இருந்தது.

சரியான முறையில் வருமான மதிப்பீடு தயாரிக்காமை அல்லது தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் வருமானங்கள் சேகரிக்கப்படாமை, சிக்கனமான பங்களிப்பாக செலவின

| | | |
|---|---|---|
| முகாமைத்துவம் செய்யப்படாமையினால் அரசாங்கம் கடன் பெற வேண்டியேற்பட்டது. அந்த கடனை பெற்றுக்கொள்ளல் வருடாந்தம் அதிகரித்துச் சென்றமையால் கடன் வட்டிக் கிரயம் வருடாந்தம் அதிகரித்தமையின் காரணமாக மீண்டெழும் செலவினங்களும் அதிகரித்திருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை எதிர்பார்த்த பிரகாரம் சேகரித்துக் கொள்வதற்கு முடியாமையும், மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தமையும் வருடாந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கு வருமானம் போதியளவில் இல்லாதிருந்தமையினாலும் வருமான பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது. | | |

**2.3 வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ரூபா 2,080 பில்லியனாக இருந்தது. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.37 சதவீதம் ஆகும். 2020 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ரூபா 2,116 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.08 சதவீதம் ஆகும். 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த காலவீச்சு முழுவதும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை காணப்பட்டதுடன் அது 2006 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட ரூபா 300 பில்லியன் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டு வரையில் ரூபா 2,080 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. அந்த காலவீச்சில் ஆகக்கூடிய வரவு | 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் எண் நிதி நிர்வாகப் பொறுப்புகள் சட்டத்தின் பிரிவு 3 (அ) இன் படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இங்கே, வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை என்பது பொருளாதார வகைப்பாட்டின் படி சரிசெய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையைக் குறிக்கிறது. அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை நோக்கிச் செல்வதில் சிரமம் இருந்தால் அதற்கான | தொடர்புடைய சட்ட விதிகளுக்கு இணங்க வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை குறைக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| செலவுத் திட்ட பற்றாக்குறை 2020 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எடுக்கும் போது 5.55 சதவீதம் முதல் 14.08 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. உள்ளபடியான வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை உள்ளபடியான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் காணப்பட வேண்டியிருந்த 5 சதவீத எல்லை அந்த காலப்பகுதியில் எந்தவொரு ஆண்டின் போதும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே 5.55 சதவீதம், 5.69 சதவீதம் மற்றும் 5.59 சதவீத அளவை பேணிச்செல்வதற்கு முடியுமாக இருந்தது. | காரணங்களை முன்வைத்து எதிர்காலப் வேலைத்திட்டங்கள் குறித்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், அதற்கேற்ப இறுதி வரவு செலவுத்திட்ட நிலவரங்கள் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை தொடர்பான அறிக்கையில் அந்த விடயங்கள் விளக்கப்பட வேண்டும்.<br><br>பொருளாதார வகைப்பாட்டின் படி, 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை ரூபா 1,565 பில்லியன் ஆகும், இதுவும் மொ.உ.உ. சதவீதமாக 8.9 சதவீதம். 2021 ஆம் ஆண்டுக்கான உண்மையான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 2,058 பில்லியனாக இருந்தது, இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.2 சதவீதமாக இருந்தது. இது மதிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை விட ரூபா 493 பில்லியன் அதிகமாகும். | |

## 2.4 கடன் மீதி அதிகரித்தல்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வருடாந்த வரவு செலவுத் திட்ட அதிகரித்தமைக்கு இடையே கடன் பெற்றுக் கொள்தலின் அளவு | இவ்வாறு, கடன் பொறுப்புகள் உட்பட அரசாங்க பொறுப்புகளின் | பரிந்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி பொறுப்புகள் |

அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய கடன் மீதியாக ரூபா 16,827 பில்லியனாக அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதி உள்நாட்டு கடனாக ரூபா 9,986 மில்லியனும், வெளிநாட்டுக் கடனாக ரூபா 6,841 பில்லியனுமாக காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் கடன் மீதி ரூபா 14,692 பில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் கடன் மீதி ரூபா 2,135 பில்லியனால் அதாவது 14.53 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2006 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,431 பில்லியன் கடன் மீதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 82.72 சதவீதமாக இருந்தது. அது 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் கடன் மீதி ரூபா 16,827 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100.11 சதவீதம் ஆகும். 2021 இன் 12 ஆம் இலக்க மற்றும் 2013 இன் 15 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) 3(ஊ) பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 80 சதவீதத்தை விட குறைவாக இருக்க வேண்டிய போதிலும் ஏனைய பொறுப்புக்கள் தவிர அரசாங்கத்தின் கடன் பொறுப்புக்கள் மாத்திரம் அந்த எல்லையை விஞ்சி 100.11 சதவீதமாக இருந்தது. இந்த நிலைமை 2020 ஆம் ஆண்டின் போதும் காணப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட வரம்பை மீறுவது தொடர்பாக 2021 ஆம் ஆண்டிற்கான நிதியமைச்சினால் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படும்.

பேணப்பட வேண்டும்.

## 2.5 அரச கடன்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கடன் பெறும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட திறைசேரி பிணைமுறிப் பெறுமதி ரூபா 1,235,000 மில்லியனாக இருந்த போதிலும், ரூபா 1,742,938 மில்லியன் தொகையான திறைசேரி பிணைமுறிகள் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 507,938 மில்லியனால் அதாவது 41 சதவீதத்தால் திட்டமிடப்பட்ட அளவை விஞ்சி பிணைமுறி மூலம் கடன் பெறப்பட்டிருந்தது.<br><br>கடன் பெறும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு பணம் வங்கி அலகு (FCBU) கடன் மற்றும் இலங்கை அபிவிருத்தி பிணை முறிகளின் பெறுமதி முறையே ரூபா 251,342 மில்லியன் மற்றும் ரூபா 300,610 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான கடன் பெறல் முறையே ரூபா 29,510 மில்லியன் மற்றும் ரூபா 207,505 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட அளவினை விட ரூபா 222,241 மில்லியனால் மற்றும் ரூபா 93,105 மில்லியனால் கடன் பெற்றுக்கொள்ளல்களின் பெறுமதியும் குறைவடைந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டில், இலங்கைப் பொருளாதாரத்தில் நிலவும் நிலையற்ற தன்மை மற்றும் அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்க வரவு-செலவுத் திட்ட நிதியுதவியை ஆதரிப்பதற்காக எடுக்கப்பட்ட சந்தைக் கடன்கள் காரணமாகவும், கொவிட்-19 நோயைக் கட்டுப்படுத்துவதற்கான கூடுதல் தடுப்பூசிகளைப் பெறுவதற்கு அவசரக் கடன் வசதிகளைப் பெற்றதன் காரணமாகவும், திட்டத்துடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் அதிகரிப்பு. சீனாவில் இருந்து எடுக்கப்பட்ட திட்டக் கடன்களின் அளவு அதிகரித்ததற்குக் காரணம், அதில் சந்தைக் கடன் வசதியும் இருந்ததுதான். | கடன் வாங்குவது முறையான மற்றும் திட்டமிட்ட முறையில் செய்யப்பட வேண்டும். |

## 2.6 திறைசேரி பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதம் வழங்குதல்

---

2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வெளி நிறுவனங்களுக்கு 241 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 1,813,176 மில்லியன் தொகையான வங்கி பிணை முறிகள் 23 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 81,268 மில்லியன் சலுகை கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தது. திறைசேரி பிணைகள் காலாவதியாகியமையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் 27 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 74,360 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் ரூபா 1,886 மில்லியன் பெறுமதியில் இருக்க வேண்டிய திறைசேரி பிணைகள் மற்றும் 12 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 29,550 மில்லியன் தொகை மற்றும் ஐ. அ. டொலர் 160 மில்லியன் பெறுமதியுடைய சலுகை கடிதங்களுக்குரிய காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

2021 அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட சலுகை கடிதத்திற்காக திணைக்களத்தால் ரூபா 1,832,112,103 தொகையான கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் மிஹின் லங்கா கம்பனிக்காக விநியோகிக்கப்பட்ட 06 பிணை முறிகளுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 1,740.5 பில்லியன் வட்டித் தொகை மற்றும் 90.9 மில்லியன் கடன் தவணை பெறுமதியொன்று உள்ளடங்கியிருந்தது. 03 நிறுவனங்களினால் விநியோகிக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 3,121 மில்லியன் தொகையான திறைசேரி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களுக்குரிய செல்லுபடிக்காலம், 2022 மே 12 ஆந் திகதி வரையில் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. வங்கி பிணை மற்றும் கடிதங்கள் வழங்கிய நிறுவனத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கோவை பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------ | -------------------------------- | ---------------------------- |
| **(அ)** | **ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் கம்பனிக்கு விநியோகிக்கப்பட்ட திறைசேரி பிணைமுறி மற்றும் நிவாரணக் கடிதங்கள்** | | |
| (i) | வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனி 2016 ஆம் ஆண்டு முதல் இலங்கை வங்கியிலிருந்தும் மக்கள் வங்கியிலிருந்தும் 8 தடவைகளின் போது பெற்றிருந்த ஐ.அ.டொலர் 200 மில்லியன் மற்றும் ரூபா 26,250 மில்லியன் குறுங்கால கடன் மற்றும் மூலதனமாக்கப்பட்ட வட்டி வசதிகளின் கீழ் மக்கள் வங்கியில் ஐ.அ.டொலர் 5.38 மில்லியன் மற்றும் ரூபா 1.352 பில்லியன் என பெறப்பட்டிருந்த கடனுக்காக பொதுத் திறைசேரி பிணைமுறி மற்றும் சலுகைக் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | திறைசேரியின் பிணைமுறிகள மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை முறையாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | அரச வங்கி ஊடாக பெறப்பட்ட மேற்கூறப்பட்ட கடன் வதிகளுக்கு மேலதிகமாக 2024 யூன் மாதத்தின் போது மீளச் செலுத்த வேண்டிய 05 வருட சர்வதேச பிணைமுறி ஊடாக ஐ.அ.டொலர் 175 மில்லியன் நிதியம் வழங்கும் வகையில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனிக்காக பிணை சான்றிதழொன்று இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | திறைசேரியின் பிணைமுறிகள மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை முறையாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2016 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் செயலாற்றல் மிகவும் பாதகமான நிலையில் காணப்பட்டதுடன் அதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கடன் பணத்தை தீர்ப்பதற்கு முடியாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | திறைசேரியின் பிணைமுறிகள மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை முறையாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | 2017 நவம்பர் 08 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் இலக்கம் 17/2383/733/026-1 இன் பிரகாரம் மிஹின் லங்கா விமானக் கம்பனியை கலைப்பதற்காக அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2020 சனவரி 30 ஆந் திகதிய MF/PE/CM/2020/12 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியை மீள்கட்டமைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனம் (NAPPP – National Agency for Public Private Partnership) இதுவரையில் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அரசாங்கத்தினால் ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் எதிர்காலம் தொடர்பான தீர்மானம் எடுக்கும் வரை சலுகை கடிதம் மீண்டும் மீண்டும் விநியோகிப்பதற்கு ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | திறைசேரியின் பிணைமுறிகள மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை முறையாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஆ) மிஹின் லங்கா கம்பனிக்கு விநியோகிக்கப்பட்டிருந்த திறைசேரி பிணைமுறி மற்றும் நிவாரணக் கடிதம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2015 யூலை 14 ஆந் திகதிய PE/AV/SLA/CM/2015 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பினால் மிஹின் லங்கா கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக இலங்கை வங்கியிலிருந்து ரூபா 1,650 மில்லியன் குறுங்கால கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கடன் பணத்தை செலுத்த வேண்டிய காலஎல்லை 2016 மார்ச் 31 ஆந் திகதியில் காலாவதியாகி இருந்தது. எனினும், கடன்பணத்தை மீளச் செலுத்தும் காலஎல்லையை தொடர்ச்சியாக நீடித்து சலுகைக் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், இறுதியாக நீடித்தல் 2022 திசெம்பர் 31 வரை அல்லது அறவிடும் நடவடிக்கைகள் முடியும் வரை இதில் எது முந்தியதோ அத்திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. | அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.<br><br>மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் தொகைக்கு மிஹின் லங்கா நிறுவனம் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் வட்டித் தொகை, மக்கள் வங்கியிலிருந்து திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா 1000 மில்லியன் ஈவுத்தொகைக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டுள்ளது. | திறைசேரியின் பிணைமுறிகள மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை முறையாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை வங்கியிலிருந்து பெற்ற ரூபா 1,650 மில்லியன் கடன் தொகையில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,560,962,436 நிலுவை மூலதன மீதியும், ரூபா 180,765,865 தொகையான வட்டி மீதியுமாக கூட்டுமொத்தமாக ரூபா 1,741,728,301 நிலுவைத் தொகையொன்று மேலும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | கம்பனி பெற்ற ரூபா 1,650 மில்லியன் கடன் தொகையின் தொடடர்ந்தும் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் மூலதனப் பகுதியின் கூட்டுத்தொகை ரூபா 1,741,728,301 ஆகும். | திறைசேரியின் பிணைமுறிகள மற்றும் நிவாரணக் கடிதங்களை வழங்கும் நடைமுறை முறையாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.7 இலாபம் மற்றும் பங்கிலாபம்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக 20.02.03.00 என்ற இலாப வருமான குறியீடு மற்றும் 20.02.04.00 என்ற இலாபப் பங்கு வருமானத்தின் குறியீட்டிலிருந்து முறையே ரூபா 49 பில்லியன் மற்றும் 6 பில்லியனாக வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது முறையே அதில் ரூபா 25.92 பில்லியன் மற்றும் ரூபா 4.67 பில்லியன் சேகரிப்பதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு முடியுமாக இருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம் மற்றும் இலாபப் பங்கு வருமானத்தில் முறையே 52 சதவீதம் மற்றும் 78 சதவீதமாக காணப்பட்டது. | கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக, பெரும்பாலான நிறுவனங்கள் குறைவான லாபகரமான சூழ்நிலையைப் அறிக்கையிட்டிருந்தன. மேலும் ஈவுத்தொகையைப் பெறும்போது இருக்கும் செயற்படு மூலதனத் தேவைப்பாடு முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட்டன. | நி.பி. 85 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, துல்லியமான மற்றும் நியாயமான வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதன பங்களிப்பு ரூபா 760,777,405,378 ஆகும். அந்த முதலீட்டிற்காக மீளாய்வாண்டில் ரூபா 30,590,893,194 இலாபம் மற்றும் இலாபப் பங்கு மாத்திரம் கிடைத்திருந்தது. மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு பெறுமதியில் 4 சதவீதமான அளவு இலாபம் மற்றும் இலாபப் பங்காக பெறப்பட்டிருந்தது. | கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக, பெரும்பாலான நிறுவனங்கள் குறைவான லாபகரமான சூழ்நிலையைப் அறிக்கையிட்டிருந்தன. மேலும் ஈவுத்தொகையைப் பெறும்போது இருக்கும் செயற்படு மூலதனத் தேவைப்பாடு முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட்டன. | பொது முயற்சிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் எண்ணிக்கை 145 ஆக இருந்த போதும், அதில் 39 நிறுவனங்களுக்காக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 39 நிறுவனங்களில் மாத்திரம் இலாபம் மற்றும் இலாப பங்கு திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான பங்கிலாபம் மற்றும் ஈவுத்தொகை பெறக்கூடிய 58 நிறுவனங்களுக்காக வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | பொது முயற்சிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஈ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தேறிய மிகை (all sums remaining out of the net surplus revenue) திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் மிகையில் அறிக்கையிட்டு அரசாங்க முயற்சிகளில் அந்த மிகையை திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினால் போதியளவான நடவடிக்கைகள் எடுக்காதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டது. | இலாபத்தின் ஒரு பகுதியையோ அல்லது மொத்தத்தையோ பொதுச் செலவினங்களுக்காக திரண்ட நிதியத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, நிறுவனங்களின் செயற்படு மூலதனத் தேவைப்பாடு மற்றும் நிறுவனங்களின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களுக்கும் தீங்கு விளைவிக்காத வகையில் நிதி பெறப்படுகிறது. | பொது முயற்சிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

## 2.8 வங்கி மேலதிகப்பற்று

------------------------------------

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மேலதிகப்பற்று ரூபா 798,453,585,243 ஆக காணப்பட்டது. இந்த மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------ | -------------------------------- | ----------------------------- |
| (அ) | 2021 சனவரி 01 இல் காணப்பட்ட ரூபா 463,868,639,897 தொகையான வங்கி மேலதிகப்பற்று 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 334,584,945,346 இனால் அதாவது | அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட வழிகாட்டுதல்களின்படி வரி கட்டமைப்பை திருத்தியமைத்ததன் காரணமாக அரசாங்க | வருமான முகாமைத்துவம் மற்றும் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் முறைப்படி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 72 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | வருவாயில் குறைவடைந்தமையும் மற்றும் கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக சுகாதார மற்றும் நலன்புரி செலவுகள் அதிகரிப்பு உட்பட செலவுகள் அதிகரிப்பு காரணமாக, குறுகிய கால கடன் கருவியாக வங்கி மேலதிகப்பற்று பயன்படுத்த நேர்ந்தது. | |
| (ஆ) | வங்கி மேலதிகப்பற்றுக்காக மீளாய்வாண்டின் போது இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியினால் அறவிடப்பட்டிருந்த முறையே ரூபா 25,637,153,353 மற்றும் ரூபா 22,046,541,417 மேலதிக பற்றுக்காக வட்டி செலுத்தப்பட்டிருந்தது. 2021 ஆகஸ்ட் 19 ஆந் திகதி முதல் மேலதிகப்பற்று வட்டி வீதமும் அதிகரித்திருந்ததுடன் அதன் பிரகாரம் வங்கி மேலதிகப்பற்றுக்காக நாளொன்றுக்கு செலுத்த வேண்டிய வட்டியும் அதிகரித்திருந்தது. | மேற்கூறிய உண்மைகளின் அடிப்படையில், ஸ்ரீ வங்கி மேலதிகப்பற்று அதிகரித்துள்ளது மற்றும் வங்கி மேலதிகப்பற்று வட்டி சதவீதமும் அதிகரித்துள்ளது. | வருமான முகாமைத்துவம் மற்றும் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் முறைப்படி செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2019, 2020 மற்றும் 2021 என்ற ஆண்டுகளின் இறுதியின் போது காணப்பட்ட வங்கி மேலதிகப்பற்று அந்த ஆண்டுகளுக்குரிய நிதிச்சொத்துக்களுடன் ஒப்பீடு செய்யும் போது முறையே 23.05 சதவீதம், 51.82 சதவீதம் மற்றும் 80.84 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட 23.05 வீத விகிதம் முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதிவரையில் காணப்பட்ட 80.84 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | வருமான முகாமைத்துவம் மற்றும் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் முறைப்படி செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மக்கள் வங்கியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் 2021 யூன் 02 ஆந் திகதிய கடிதத்தில் மக்கள் வங்கியில் தற்போது காணப்படுகின்ற திரவத் தன்மையின் காரணமாக அரசாங்கத்திற்கு | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சமுர்த்தி நிவாரணங்கள் மற்றும் கடன் சேவைப்படுத்தல் போன்ற கட்டாய செலவினங்களுக்காக வங்கி | வருமான முகாமைத்துவம் மற்றும் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் முறைப்படி செய்யப்பட வேண்டும். |

வழங்கப்படுகின்ற நாளாந்த வங்கி மேலதிகப்பற்று வசதிகள் ரூபா 340 மில்லியனுக்கு வரையறுக்கப்பட்டிருந்ததாக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2021 செப்தெம்பர் மாதத்தில் 03 தினங்கள் இந்த எல்லையை விஞ்சி மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட்டிருந்தது. மக்கள் வங்கியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் 2021 திசெம்பர் 16 ஆந் திகதிய கடிதத்தில் நாளாந்த வங்கி மேலதிகப் பற்று வசதிகள் ரூபா 320 மில்லியனுக்கு வரையறுக்கப்பட்ட போதும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வங்கி மேலதிகப்பற்று ரூபா 337 மில்லியன் ஆனமையால் அந்த எல்லையினையும் விஞ்சி திறைசேரி செயற்பட்டிருந்தது.

மேலதிகப்பற்று எல்லை உயர் முகாமைத்துவத்தின் இணக்கப்பாட்டுடன் அதிகரிக்க நேர்ந்தது.